கால்நடை பராமரிப்பு, பால் வளம்

மற்றும் மீன்வளத் துறை

# கால்நடை பராமரிப்பு

## மானியக் கோரிக்கை எண். 6

அறிவிப்புகள்

2019–2020

**உடுமலை K. ராதாகிருஷ்ணன்**

கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர்

**1. கறவை மாட்டுப் பண்ணையத்தின் பொருளாதாரத்தை மேம்படுத்திட பாலினம் பிரிக்கப்பட்ட உறைவிந்துக் குச்சிகள் ஒன்றுக்கு ரூ.1200 மதிப்பில் 50,000 எண்ணிக்கையில் வழங்கி, செயற்கைமுறை கருவூட்டல் பணி மேற்கொள்ள ரூ.4.50 கோடி செலவிடப்படும்.**

பால் உற்பத்தியைப் பெருக்கும் நோக்கத்துடனும் விவசாயிகளின் வருமானத்தை அதிகரித்திடவும் **மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி** அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களிடமிருந்து ரூ.4.50 கோடி மதிப்பில் 50,000 பாலினம் பிரிக்கப்பட்ட உறைவிந்துக் குச்சிகள் கொள்முதல் செய்யப்பட்டு, 75 விழுக்காடு மானியத்தில் விவசாயிகளுக்கு வழங்கப்படும். இந்த வசதியைப் பயன்படுத்துவதால், 17,500 முதல் 20,000 உயர் மரபின கிடேரி கன்றுகளை உற்பத்தி செய்ய இயலும்.

**2. தமிழகத்தின் பாரம்பரிய உள்நாட்டு இனங்களான பர்கூர், காங்கேயம், புலிக்குளம், உம்பளாச்சேரி மற்றும் சிவப்பு சிந்தி ஆகியவற்றைப் பாதுகாத்து அதிநவீன கருமாற்றுத் தொழில்நுட்பம் மூலமாக 169 கன்றுகளை உருவாக்குவதற்காக ரூ.4.54 கோடி செலவிடப்படும்.**

நமது பாரம்பரிய உள்நாட்டு இனங்களான பர்கூர், காங்கேயம், புலிக்குளம் மற்றும் உம்பளாச்சேரி ஆகியவற்றைப் பாதுகாத்திட **மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி** ரூ.4.54 கோடி நிதி ஒதுக்கீட்டில், உயரிய இனப்பெருக்கத் தொழில்நுட்பமான கருமாற்றுத் தொழில்நுட்பம் செயல்படுத்தப்படும். இதன்மூலம் பெறப்படும் காளைக் கன்றுகள் உறைவிந்து உற்பத்தி நிலையங்களில் பயன்படுத்தப்படும்.

## 3. ஆட்டுக்கொல்லி நோய் தடுப்பூசிப்பணி 66 இலட்சம் செம்மறியாடுகள் மற்றும் வெள்ளாடுகளுக்கு ரூ.2.50 கோடி செலவில் மேற்கொள்ளப்படும்.

நச்சுயிரி கிருமிகளால் ஏற்படும் ஆட்டுக்கொல்லி நோய், ஆடுகள் வளர்க்கும் விவசாயிகளுக்கு கூடுதல் வருமானத்தை பாதிக்கும் ஒரு முக்கியமான நோயாகும். மாநிலத்தில் உள்ள சிறிய அசைபோடும் பிராணிகளுக்கு **மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி** ரூ.2.50 கோடி செலவில் ஆட்டுக் கொல்லி நோய் தடுப்பூசிப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

## 4. மாநிலத்தில் உள்ள கால்நடைகளுக்கு ரூ.1.63 கோடி செலவில் கன்றுவீச்சுநோய் (Brucellosis) கடுங்கண்காணிப்பு மேற்கொள்ளப்படும்.

கன்றுவீச்சு நோயானது விலங்குகளிலிருந்து மனிதர்களுக்கு பரவும் ஒரு முக்கியமான நோயாகும். இந்நோய், அனைத்து கால்நடைகளையும் தாக்கக்கூடியது. இந்நோய் தாக்கத்தினை கடுங்கண்காணிப்பு மூலம் கண்டறிந்து, தடுப்பூசிப்பணி மேற்கொள்ள வேண்டும். **மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி** ரூ.1.63 கோடி நிதி ஒதுக்கீட்டில், மாநிலம் முழுவதும் உள்ள கால்நடைகளில் இரத்த மாதிரிகளை சேகரித்து, நோய் கண்டறியும் கடுங்கண்காணிப்புப் பணி மேற்கொள்ளப்படும்.

**5. விவசாயிகளின் 33,000 ஏக்கர் நிலத்தில் ரூ.5.66 கோடி செலவில் கோ(எப்எஸ்) 29, கம்பு நேப்பியர், சோளம் மற்றும் காராமணி போன்ற பசுந்தீவனப் பயிர்கள் சாகுபடி செய்யப்படும்.**

தீவன உற்பத்தியை பெருக்கும் நோக்கத்தில், 50,000 விவசாயிகளின் 5,000 ஏக்கர் நிலத்தில் இறவை பாசனத்தின்மூலம் பல்வகைப் பயிர்களான கோ(எப்எஸ்) 29 / கம்பு நேப்பியர் / சோளம் / வேலிமசால் / தட்டைப் பயிறு சாகுபடி செய்யப்படும். 1.12 இலட்சம் விவசாயிகளின் 28,000 ஏக்கர் மானாவாரி நிலத்தில் சோளம் / காராமணி ஆகியவை சாகுபடி செய்யப்படும். **மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி** ரூ.5.66 கோடி செலவில் இத்திட்டம் 1.62 இலட்சம் விவசாயிகள் பயன்பெறும் வகையில் செயல்படுத்தப்படும்.

**6. தரமான பசுந்தீவன கோ(எப்எஸ்) 29 விதைகள் 43.80 மெ.டன் அளவில் உற்பத்தி செய்யும் பொருட்டு ரூ.0.70 கோடி செலவில் ஈச்சங்கோட்டை, நடுவூர், செட்டிநாடு மற்றும் படப்பை ஆகிய துறையின் நான்கு கால்நடை பண்ணைகளில் உற்பத்தி செய்யப்படும்.**

பசுந்தீவன உற்பத்தியை அதிகரிக்கும் நோக்குடன் விவசாயிகளுக்குத் தேவையான தரமான பசுந்தீவன விதைகளை வழங்கிட, உயரிய விதை உற்பத்தி முறைகளை கடைபிடிப்பதன் மூலம் செயல்படுத்தலாம். **மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி** உயரின கால்நடை பெருக்குப் பண்ணை, ஈச்சங்கோட்டை, மாவட்ட கால்நடைப் பண்ணை, நடுவூர், செட்டிநாடு மற்றும் தீவனப் பண்ணை, படப்பை ஆகிய பண்ணைகளில் இத்திட்டம் ரூ.0.70 கோடி செலவில் செயல்படுத்தப்படும்.

**7. பசுந்தீவன உற்பத்தியை அதிகரிப்பதற்கு விதைகள், உரம் மற்றும் எரு அடங்கிய நான்கு கிலோ கிராம் விதைத் தொகுப்பு ரூ.5.41 கோடி செலவில் 90,000 விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்படும்.**

அதிக விளைச்சல் தரக்கூடிய தானிய வகை பசுந்தீவனம் மற்றும் பயறு வகை பசுந்தீவன விதைத் தொகுப்பு 90,000 விவசாயிகளுக்கு **மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி** ரூ.5.41 கோடி செலவில் 9,000 எக்டேர் பரப்பளவில் பயிரிடுவதற்காக வழங்கப்படும்.

**8. இனப்பெருக்க உள்ளீடுகளான திரவ நைட்ரஜன் மற்றும் உறைவிந்துக் குச்சிகள் ஆகியவற்றை விநியோகிக்கும் வலையமைப்பினை வலுப்படுத்துவதற்காக வாகனம் ஒன்றிற்கு ரூ.15.00 இலட்சம் வீதம் 10 போக்குவரத்து வாகனங்கள் ரூ.1.50 கோடி செலவில் வழங்கப்படும்.**

செயற்கைமுறை கருவூட்டல் பணி தொய்வின்றி நடைபெற தேவையான இடுபொருட்கள் வழங்குவதற்காக அரியலூர், கரூர், கிருஷ்ணகிரி, பெரம்பலூர், நாகப்பட்டினம், நாமக்கல், தேனி, திருப்பூர், திருவள்ளூர் மற்றும் திருவாரூர் ஆகிய 10 மாவட்ட கால்நடை பெருக்கம் மற்றும் தீவன அபிவிருத்தி அலகுகளுக்கு **மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி** ரூ.1.50 கோடி செலவில் 10 போக்குவரத்து வாகனங்கள் வழங்கப்படும்.

**9. சேலம் மேச்சேரி செம்மறியாடுகளின் மரபணுவினை உயர்த்த, 1,027 தரம் உயர்த்தப்பட்ட கிடாக்குட்டிகள் சேலம், திருப்பூர், கரூர் மற்றும் தர்மபுரி மாவட்டங்களில் உள்ள விவசாயிகளுக்கு ரூ.5.25 கோடி செலவில் வழங்கப்படும்.**

சேலம், திருப்பூர், கரூர் மற்றும் தர்மபுரி ஆகிய மாவட்டங்களில் இயற்கை முறை இனவிருத்தி மூலம் மேச்சேரி செம்மறியாடுகளின் மரபணு முன்னேற்றத்திற்காக **மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி** ரூ.5.25 கோடி செலவில் இத்திட்டம் செயல்படுத்தப்படும். இதன்மூலம், 1,027 தரம் உயர்த்தப்பட்ட மேச்சேரி இன கிடாக்குட்டிகள் விவசாயிகளுக்கு வழங்கப்படும்.

**10. வரையறை செய்யப்படாத செம்மறியாடுகளின் மரபியல் தரத்தை செயற்கை முறை கருவூட்டல் மூலம் மேம்படுத்துவதற்காக, சேலம் மாவட்டத்தில் மேச்சேரி செம்மறியாட்டின் திரவ விந்து உற்பத்தி நிலையம் ரூ.2.23 கோடி செலவில் ஏற்படுத்தப்படும்.**

செம்மறியாடுகளின் இறைச்சி உற்பத்தித் திறன் பண்புகளை மேம்படுத்திட, அதிக மரபியல் தரம் கொண்ட மேச்சேரி செம்மறியாடுகளின் கிடாக்களிலிருந்து விந்து சேகரித்து அதனை வரையறை செய்யப்படாத செம்மறியாடுகளில் பயன்படுத்தி அதன் தரத்தினை உயர்த்துவதற்காக **மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி** சேலம் மாவட்டத்தில், ரூ.2.23 கோடி செலவில் ஒரு திரவ விந்து உற்பத்தி நிலையம் நிறுவப்படும். இத்திட்டம் சேலம், திருப்பூர், கரூர், நாமக்கல், ஈரோடு மற்றும் தர்மபுரி மாவட்டங்களில் **46,080** செம்மறியாடுகளில் செயற்கைமுறை கருவூட்டல் மூலம் செயல்படுத்தப்படும்.

**11. அனைத்து மாவட்டங்களிலும் உள்ள 3,000 பயனாளிகளுக்கு ரூ.20,000 மதிப்பீட்டில் தானியங்கி புல்நறுக்கும் கருவிகள் 75 விழுக்காடு மானியத்தில் ரூ.6.00 கோடி செலவில் விநியோகிக்கப்படும்.**

புல் நறுக்கும் கருவிகள் மூலம் தீவனப் பயிர்களை சிறு சிறு துண்டுகளாக நறுக்கி பயன்படுத்துவதனால் கால்நடைகளின் செரிமானத் தன்மை அதிகரிப்பதுடன், தீவனம் வீணாவதும் தடுக்கப்படுகிறது. இதன் அடிப்படையில் **மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி** அனைத்து மாவட்டங்களையும் உள்ளடக்கி 3,000 தீவன புல்நறுக்கும் கருவிகள் 75 விழுக்காடு மானியத்தில் ரூ.6.00 கோடி செலவில் வழங்கப்படும்.

**12. தரமான நாட்டின கோழிகள் வழங்குவதற்காக நாட்டுக்கோழி இனப்பெருக்கப்பண்ணையுடன் இணைந்த குஞ்சு பொரிப்பகம் மற்றும் தீவன அலகு ரூ.48.81 கோடி செலவில் சேலம், ஒருங்கிணைந்த கால்நடைப் பூங்காவில் நிறுவப்படும்.**

புழக்கடையில் இயற்கை முறையில் அசில் கோழிகளை வளர்க்க பெண்களை ஊக்குவித்து, அவர்களின் வாழ்க்கைத் தரத்தை முன்னேற்றும் நோக்கத்துடன், ஒரு நாட்டுக் கோழி (அசில்) இனவிருத்தி பண்ணையுடன் இணைந்த குஞ்சு பொரிப்பகம் மற்றும் தீவன அபிவிருத்தி அலகு **மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி** ரூ.48.81 கோடி செலவில் சேலம் ஒருங்கிணைந்த கால்நடைப் பூங்காவில் நிறுவப்படும். இதன்மூலம் ஆண்டொன்றிற்கு 20 இலட்சம் நல்ல தரமான அசில் இன நாட்டுக் கோழி குஞ்சுகள் மற்றும் 2,000 மெ. டன் தரமான தீவனம் உற்பத்தி செய்யப்படும்.

**13. விழுப்புரம் மாவட்டத்தில் கறிக்கோழிப் பண்ணைகள் அமைப்பதை ஊக்குவிக்கும் நோக்குடன் ஒரு பயனாளிக்கு ரூ.1.125 இலட்சம் வீதம் ரூ.2.25 கோடி செலவில் 200 பயனாளிகளுக்கு கறிக்கோழிக் குஞ்சுகள் வழங்கப்படும்.**

விழுப்புரம் மாவட்டத்தில் நடப்பு ஆண்டில், கறிக்கோழி வளர்ப்பினை ஊக்குவிக்கும் நோக்குடன் **மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி** ரூ.2.25 கோடி செலவில் 200 பயனாளிகளுக்கு தலா 600 கறிக்கோழிக் குஞ்சுகள் மற்றும் பிற உள்ளீடுகளான கொட்டகை, தேவையான உபகரணங்கள், தீவனம் போன்றவை வழங்கப்படும்.

**14. கால்நடை நோய் புலனாய்வு பிரிவு ஒன்றிற்கு ரூ.1.00 கோடி மதிப்பில், நாமக்கல் மற்றும் திருவாரூர் மாவட்டங்களில் ரூ.2.00 கோடி செலவில் புதிய கட்டடங்கள் கட்டப்படும்.**

கால்நடைகளின் நோய் கண்காணிப்பு, நோய் முன்னறிவிப்பு மற்றும் நோய்க்கிளர்ச்சி நேரங்களில் உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள புதிதாக ஆரம்பிக்கப்பட்ட நாமக்கல் மற்றும் திருவாரூர் மாவட்டங்களிலுள்ள கால்நடை நோய் புலனாய்வு பிரிவுகளுக்கு **மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி** ரூ.2.00 கோடி செலவில் புதிய கட்டடங்கள் கட்டப்படும்.

**15. கால்நடைகளுக்காக 1,658 கால்நடை நிலையங்களில் தலா ரூ.25,000 மதிப்பில், ரூ.4.15 கோடி செலவில் தண்ணீர் தொட்டிகள் கட்டப்படும்.**

கால்நடைகளுக்கு வறட்சி காலங்களிலும் தடையின்றி குடிநீர் அளித்திட **மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி** 1,658 கால்நடை நிலையங்களில் ரூ.4.15 கோடி செலவில் தண்ணீர் தொட்டிகள் கட்டப்படும்.

**16. இராமநாதபுரம், அரியலூர் மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் தலா ஒரு பிரிவு வீதம், ஒன்றுக்கு ரூ.1.00 கோடி செலவில் புதியதாக மூன்று கால்நடை நோய் புலனாய்வு பிரிவுகள் ரூ.3.00 கோடி மொத்த செலவில் தோற்றுவிக்கப்படும்.**

இராமநாதபுரம், அரியலூர் மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் ஒவ்வொன்றிற்கும் ரூ.1.00 கோடி வீதம் மூன்று கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவுகள் **மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி** ரூ.3.00 கோடி செலவில் புதியதாக தோற்றுவிக்கப்படும்.

**17. கஜா புயலினால் பாதிக்கப்பட்ட திருவாரூர், தஞ்சாவூர், புதுக்கோட்டை மற்றும் சிவகங்கை மாவட்டங்களில் உள்ள பண்ணைகளின் கட்டடங்கள் ரூ.9.50 கோடி செலவில் புனரமைக்கப்படும்.**

கஜா புயலினால் பாதிப்படைந்த கால்நடை பண்ணை, கொற்கை, அயலின கால்நடை பெருக்குப்பண்ணை, ஈச்சங்கோட்டை மற்றும் மாவட்ட கால்நடை பண்ணைகளான புதுக்கோட்டை மற்றும் செட்டிநாடு ஆகிய பண்ணைகளின் கட்டடங்கள் **மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி** ரூ.9.50 கோடி செலவில் புனரமைக்கப்படும்.

**18. அறுவை சிகிச்சைக்கூட உபகரணங்கள் ரூ.10.00 இலட்சம் மதிப்பில் மாவட்டத்திற்கு ஒரு கால்நடை நிலையம் வீதம் 32 மாவட்டங்களுக்கு ரூ.3.20 கோடி செலவில் வழங்கப்படும்.**

நவீன அறுவை சிகிச்சைக் கூடங்களில், தேவையான கருவிகள், அவசர உயிர்காக்கும் கருவிகள், கால்நடைகளைத் தொடர்ந்து கண்காணிக்கும் கருவிகள், ஆய்வுக் கருவிகள் மற்றும் அறுவை சிகிச்சைக்கு தேவைப்படும் உபகரணங்கள் மற்றும் சாதனங்கள் 32 கால்நடை மருத்துவ நிலையங்களுக்கு **மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி** ரூ.3.20 கோடி செலவில் வழங்கப்படும்.

## 19. திருப்பூர் மாவட்ட கால்நடை பன்முக மருத்துவமனைக்கு ரூ.2.60 கோடி செலவில் புதிய கட்டடம் கட்டப்படும்.

திருப்பூர் மற்றும் அதைச்சுற்றியுள்ள பகுதிகளில் கால்நடை வளர்ப்போர் பயன்பெறும் விதமாக அறுவை சிகிச்சைக்கூடம், அலுவலக அறைகள், நிர்வாகக் கட்டடம், பொருட்கள் வைப்பறை மற்றும் ஆய்வுக் கூடம் ஆகியவற்றை உள்ளடக்கிய புதிய கட்டடம், திருப்பூர் கால்நடை பன்முக மருத்துவமனைக்கு **மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி,** ரூ.2.60 கோடி செலவில் கட்டப்படும்.

## 20. தஞ்சாவூர் மண்டல இணை இயக்குநர் அலுவலகத்திற்கு புதிய கட்டடம் ரூ.2.00 கோடி செலவில் கட்டப்படும்.

களப்பணி திட்டங்கள் மற்றும் அவற்றின் செயல்பாடுகள், முகாம் பணிகள், மருந்துகள் மற்றும் தடுப்பூசிகள் விநியோகம், கால்நடை நோய் ஆய்வுப் பணிகள் அனைத்தையும் செவ்வனே மேற்கொள்ள **மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி** தஞ்சாவூரில் ரூ.2.00 கோடி செலவில் புதிய மண்டல இணை இயக்குநர் அலுவலகம் கட்டப்படும்.

## 21. கடந்த ஆண்டில் தமிழகத்தின் அனைத்து கிராம ஊராட்சிகளிலும் செயல்படுத்தப்பட்ட விலையில்லா அசில் இனக்கோழிகள் வழங்கும் திட்டம் நடப்பாண்டில் அனைத்து பேரூராட்சிகளுக்கும் விரிவுபடுத்தப்படும்.

புழக்கடை கோழி வளர்ப்பானது ஏழை மக்களின் ஊட்டச்சத்து தேவையை பூர்த்தி செய்வதோடு பெண்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திடவும் அவர்களது வருமானத்தை பெருக்கிடவும் வழிவகை செய்வதால், பேரூராட்சிகளில் வசிக்கும் பொருளாதார ரீதியில் பின்தங்கிய மகளிரும் பயனடையும் வகையில் **மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி** கடந்த ஆண்டில் தமிழகத்தின் அனைத்து கிராம ஊராட்சிகளிலும் செயல்படுத்தப்பட்ட விலையில்லா அசில் இனக்கோழிகள் வழங்கும் திட்டம் நடப்பாண்டில் அனைத்து பேரூராட்சிகளுக்கும் விரிவுபடுத்தப்படும்.

**22. ஊரக கால்நடை பண்ணையாளர்களின் மேம்பாட்டிற்காக, நவீன நோயறி சாதனங்கள் மற்றும் சிகிச்சை வசதிகளோடு நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய வளாகத்தில் ரூ.5.00 கோடி நிதி ஒதுக்கீட்டில் மண்டல பண்ணை விலங்கின சிறப்பு மருத்துவமனை ஏற்படுத்தப்படும்.**

ஊரக கால்நடை நலனுக்கு தீர்வு காணும் பொருட்டு **மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி** தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய வளாகத்தில், நோய்களை துரிதமாக கண்டறிவதற்கென நவீன நோயறி சாதனங்களுடன், 24 மணி நேர அவசர சிகிச்சை வசதிகளோடு கூடிய, மண்டல பண்ணை விலங்கின சிறப்பு மருத்துவமனை ரூ.5.00 கோடி நிதி ஒதுக்கீட்டில் ஏற்படுத்தப்படும். இதன் மூலம் நாமக்கல் மற்றும் அதனைச் சுற்றியுள்ள மாவட்டங்களின் கால்நடை பண்ணையாளர்கள் பயனடைவார்கள்.

**23. பாலினம் பிரிக்கப்பட்ட விந்தணுக்களைக் கொண்டு இனப்பெருக்க நுட்பங்களை செயல்படுத்துவதன் மூலம் திருவள்ளூர், காஞ்சிபுரம், வேலூர், திருவண்ணாமலை மற்றும் விழுப்புரம் ஆகிய மாவட்டங்களில் ரூ.2.09 கோடி நிதி ஒதுக்கீட்டில் கறவை மாடுகளில் இனப்பெருக்கம் மற்றும் உற்பத்தி திறன் மேம்படுத்தப்படும்.**

கறவை மாடுகளில் பல்வேறு காரணங்களால் ஏற்படும் மலட்டுத்தன்மை பிரச்சினைக்கு தீர்வு காணும் பொருட்டு **மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி** கறவை மாடுகளில் சினைத்தருண ஒருங்கிணைப்பு மற்றும் கூடுதல் கருமுட்டை உற்பத்தி நுட்பங்களுடன் பாலினம் பிரிக்கப்பட்ட விந்தணுக்களைக் கொண்டு செயற்கை முறை கருவூட்டல் செய்யப்படும். இதன்மூலம் தமிழ்நாட்டின் திருவள்ளூர், காஞ்சிபுரம், வேலூர், திருவண்ணாமலை மற்றும் விழுப்புரம் ஆகிய ஐந்து மாவட்டங்களில் உள்ள கறவை மாடுகளின் இனப்பெருக்கம் மற்றும் உற்பத்தி திறன் ரூ.2.09 கோடி நிதி ஒதுக்கீட்டில் மேம்படுத்தப்படும்.

**24. உணவு பாதுகாப்பிற்கென நாட்டின கோழி வளர்க்கும் 200 பண்ணையாளர்களுக்கு குஞ்சு பொரிப்பு மேலாண்மை, கோழி இறைச்சி பதனம் மற்றும் மதிப்பூட்டல் ஆகியவற்றில் கோழியின தொழில்முனைவு திறன் மேம்பாட்டுப் பயிற்சி ரூ.0.87 கோடி செலவில் அளிக்கப்படும்.**

உணவு பாதுகாப்பிற்கென, தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகமும் கால்நடைப் பராமரிப்புத் துறையும் இணைந்து **மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி** நாட்டின கோழி வளர்க்கும் 200 பண்ணையாளர்களுக்கு கோழியின தொழில்முனைவு திறன் மேம்பாட்டுப் பயிற்சி ரூ.0.87 கோடி செலவில் அளிக்கப்படும். இத்திட்டத்தின் மூலம் தமிழக அரசின் ஊரக புழக்கடை கோழி வளர்ப்பு திட்ட பயனாளிகளுக்கு, குஞ்சு பொரிப்பு பிரிவு மற்றும் இறைச்சி பதனம் மற்றும் மதிப்பூட்டல் பிரிவு ஆகியவற்றை அமைக்க உதவி செய்வதுடன், சந்தைப்படுத்தவும் வழிவகை செய்யப்படும்.

## 25. கன்னி ஆடு, கொடி ஆடு மற்றும் சேலம் கருப்பு ஆகிய நாட்டின வெள்ளாடுகளின் மரபுத் திறனை உயர்த்தி கால்நடை பண்ணையாளர்களின் வருவாயை இரட்டிப்பாக்கும் நோக்குடன் ரூ.1.49 கோடி செலவில் 1000 வெள்ளாடுகளுக்கு செயற்கை முறை கருவூட்டல் செய்யப்படும்.

தமிழ்நாட்டில் உள்ள நாட்டின வெள்ளாடுகள் குறைந்த மரபுத் திறன் உடையனவாக இருப்பதால், அவற்றின் மரபுத் திறனை துரிதமாக உயர்த்துவதற்காக தரமான விந்தணு குச்சிகளைப் பயன்படுத்தி 1000 வெள்ளாடுகளுக்கு செயற்கை முறை கருவூட்டல் செய்யும் பொருட்டு **மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி** சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியில் உள்ள உறைவிந்தணு வங்கி ரூ.1.49 கோடி செலவில் மேம்படுத்தப்படும். இதன்படி, கன்னி ஆடு, கொடி ஆடு மற்றும் சேலம் கருப்பு ஆகிய நாட்டின வெள்ளாடுகளின் மரபுத் திறன் உயர்த்தப்படுவதுடன், வெள்ளாடு வளர்ப்பில் ஈடுபடும் ஊரக கால்நடை பண்ணையாளர்களின் வருவாய் இரட்டிப்பாக்கப்படும்.

**26. செவ்வாடு, இராமநாதபுரம் வெள்ளை மற்றும் கச்சைகட்டி கருப்பு ஆகிய தென் தமிழக நாட்டின செம்மறியாடுகளின் மரபு திறனைப் பாதுகாக்கும் பொருட்டு சிறு அசையூண் விலங்கின ஆராய்ச்சி மையம் ரூ.0.80 கோடி செலவில் நிறுவப்படும்.**

தமிழ்நாட்டில் உள்ள நாட்டின செம்மறியாடுகள் அதிக நோய் எதிர்ப்பு திறனும் அதிக குட்டி ஈனும் திறனும் கொண்டுள்ளதால் செவ்வாடு, இராமநாதபுரம் வெள்ளை மற்றும் கச்சைகட்டி கருப்பு ஆகிய மூன்று நாட்டின செம்மறியாடுகளைப் பாதுகாக்கும் பொருட்டு **மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி** திருநெல்வேலி கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய வளாகத்தில் சிறு அசையூண் விலங்கின ஆராய்ச்சி மையம் ரூ.0.80 கோடி செலவில் நிறுவப்படும். இதன்மூலம், மரபுத் திறன் உயர்ந்த நாட்டின செம்மறியாடுகள் உற்பத்தி செய்யப்பட்டு தமிழ்நாட்டின் தென்மாவட்டங்களில் உள்ள கால்நடை பண்ணையாளர்களுக்கு வழங்கப்படும்.

**27. கால்நடை மருத்துவம் மற்றும் விலங்கின அறிவியல் துறைகளில் துவக்கநிலை நிறுவனங்கள் மற்றும் தொழில் முனைவோர்களை உருவாக்கும் பொருட்டு மாதவரம் பால்பண்ணையில் உள்ள கால்நடை அறிவியல் தொடக்கநிலை தொழில் உருவாக்க அமைப்பானது ரூ.0.75 கோடி செலவில் கூடுதல் கட்டட வசதிகளுடன் மேம்படுத்தப்படும்.**

கால்நடை மருத்துவம், விலங்கின அறிவியல் மற்றும் அதன் சார்பு துறைகளில் துவக்கநிலை நிறுவனங்கள் மற்றும் தொழில்முனைவோர்களை உருவாக்கும் பணியினை மேற்கொள்வதற்காக நிறுவன விதி–8ன் கீழ் மாதவரம் பால்பண்ணை வளாகத்தில் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தினால் நிறுவப்பட்ட கால்நடை அறிவியல் தொடக்கநிலை தொழில் உருவாக்க அமைப்பானது அதிக அளவில் துவக்கநிலை நிறுவனங்கள் மற்றும் தொழில் முனைவோர்களை உருவாக்கும் பொருட்டு **மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி** ரூ.0.75 கோடி செலவில் கூடுதல் கட்டட வசதிகளுடன் மேம்படுத்தப்படும்.

**28. நச்சுயிரி நோய்களுக்கான தடுப்பூசிகள் தயாரிப்பதற்காக மாதவரம் பால்பண்ணையில் உள்ள நச்சுயிரி தடுப்பூசி ஆராய்ச்சி ஆய்வகம் ரூ.0.75 கோடி செலவில் கூடுதல் கட்டட வசதிகளுடன் மேம்படுத்தப்படும்.**

கால்நடை மருத்துவத்தில் முக்கியத்துவம் பெற்ற பல்வேறு நச்சுயிரி நோய்களுக்கான தடுப்பூசிகள் தயாரிப்பு பணிகளை மேற்கொண்டு வரும் மாதவரம் பால்பண்ணையில் அமைந்துள்ள தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் நச்சுயிரித் தடுப்பூசி ஆராய்ச்சி ஆய்வகம் **மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி** ரூ.0.75 கோடி செலவில் கூடுதல் கட்டட வசதிகளுடன் மேம்படுத்தப்படும்.

**உடுமலை K. ராதாகிருஷ்ணன்**

கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர்